[1981 மார்ச் 27

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. மத்திய அரசிடமிருந்து பணம் வாங்குவதற்காக மட்டும் நாம் இதைச் செய்கிறோம் என்று சொல்வது நமக்கு நல்லதல்ல, மத்திய அரசுக்கும் நல்லதல்ல. மின் வாரியம் ஏற்கெனவே என்னென்ன பணிகளை அந்தப் பகுதியிலே செய்து வருகிறதோ அதே பணியைத்தான் இந்தக் கூட்டுறவு அமைப்பின் மூலமும் செய்து வருகிறோம். புதிதாக லைன்கள் போடுவது, மின் இணைப்பு, இணைப்பு வழங்குவது போன்ற பணிகளைச் செய்து வருகிறோம். கட்டண விகிதங்களைக் கூட மாற்றி அமைப்பதற்குரிய அதிகாரங்கள்கூட இந்த அமைப்புக்கு உண்டு. ஆனால் இன்றுள்ள நிலைமையில் அவற்றை எல்லாம் செய்வதில்லை. இப்போது தானே ஆரம்பித்திருக்கிறோம். போகப் போக எப்படி இது செயல் படுகிறது என்பதைப் பார்த்து அவற்றை பிறகு செய்யலாம் என்று இருக்கிறோம்.

செங்கற்பட்டு—திருவலம்—கொரட்டூர் மின்பாதை டவர்.

*வினா எண் 507— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு-திருவலம்-கொரட்டூர் மின் பாதையில் டவர் சாய்ந்த விவரம அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

(இ) இதனால் எவ்வளவு நட்டம் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) அம்.

(ஆ) செங்கற்பட்டு — திருவலம் மின் பாதையில் டவர் சாய்ந்ததற்கான காரணங்கள் குறிப்பாக ஆராயப்பட்டு, இது போன்று பிற்காலத்தில் விழாமல் இருப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளது. அந்த டவர் வேறு தகுந்த இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. செங்கற்பட்டு — கொரட்டூர் மின் பாதையில் உள்ள டவருக்கு ஏற்பட்ட பழுது காண்டிராக்டருடைய சொந்தச் செலவில் சரிபார்த்து தரப்பட்டது.

(இ) செங்கற்பட்டு—கொரட்டூர் மின் பாதையில் டவர் சாய்ந்ததால் மின் வாரியத்திற்கு எந்தவிதமான நட்டமும் ஏற்படவில்லை. செங்கற்பட்டு—திருவலம் மின் பாதையில் டவர் சாய்ந்ததால் மின் வாரியத்திற்கு ரூ. 70,000 நட்டம் ஏற்பட்டது.

1981 மார்ச் 27]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த டவர் அமைக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன. கான்ட்ராக்டர் இந்த டவரைக் கட்டி நம்முடைய மின்வாரியத்திற்கு ஒப்படைத்ததற்குப் பிறகு இந்த டவர் சாய்ந்ததா? அல்லது ஒப்படைப்பதற்கு முன்பே சாய்ந்து விட்டதா? அப்படி சரியான முறையில் இந்த டவர் அமைக்கப்படாதது குறித்து அதனை அப்போது பார்வையிட்ட அதிகாரிகள் மீது மின் வாரியம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது இரண்டு லைன்கள் பற்றிய கேள்வி. செங்கற்பட்டு—திருவலம் மின்பாதையில் உள்ள டவர் ஒன்று. செங்கற்பட்டு—கொரட்டூர் மின் பாதையில் உள்ள டவர் என்பது மற்றொன்று. செங்கற்பட்டு—கொரட்டூர் லைனைப் பொறுத்த வரையில் பலத்த காற்றினாலும், மின் கோபுரம் முற்றிலும் நிறுவப்படாத காரணத்தாலும் கோபுரம் சாய்ந்தது. அந்தச் செலவை கான்ட்ராக்டரே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். செங்கற்பட்டு—திருவலம் லைனைப் பொறுத்த வரையில் போடப்பட்ட அந்த டவரிலிருந்து கம்பிகளை இழுக்கின்றபோது டவர் சாய்ந்து விட்டது. லூசான களிமண்ணிலே அந்த டவர் உருவாக்கப்பட்டிருந்தது. அந்த இடத்திலே பவுண்டேஷனைக் கொஞ்சம் நன்றாகப் போட்டிருக்க வேண்டும். ஏன் அவ்வாறு போடவில்லை என்பது பற்றியும், சாதாரண இடங்களில் போடக்கூடிய பவுண்டேஷனையே அங்கேயும் எதற்காகப் போட்டிருக்கிறார்கள் என்பது பற்றியும் அந்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க மின் வாரியம் ஏற்கனவே முற்பட்டுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, அதற்குரிய அஸ்திவாரம் போடுவதிலே கோளாறு ஏற்பட்டதால் டவர் சாய்ந்துவிட்டது என்று சொல்லுகிறார்கள். அப்படி அஸ்திவாரம் போடுவதற்கு முன்பே செய்ய வேண்டிய மண் பரிசோதனை செய்யப்பட்டதா? அப்படிச் செய்யவில்லை என்று சொன்னால், அதற்கு என்ன காரணம்? அப்படி டெஸ்ட் செய்யப்படாமல் இருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது பற்றி எல்லாம் விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மின் வாரியம் ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே சரியான பவுண்டேஷன் அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இது போன்ற நிலைமை எல்லா இடங்களிலும் இருக்கின்றது. ஆகவே அதைப் போக்க மின்வாரியம் நடவடிக்கை எடுக்குமா?

[முற்பகல் 9—10]

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: தலைவரவர்களே எல்லா இடங்களிலுமே அதுபோல இருந்தால், நமக்கு இன்றைக்கு மின்சாரமே வராது. இந்த ஒரே ஒரு இடத்தில்தான் இப்படி ஏற்பட்டிருக்கிறது.

செங்கை மாவட்ட பெயர் மாற்றல்.

*வினா எண் 508—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை மாவட்டத்தை அண்ணா மாவட்டம் என்று பெயர் மாற்ற அரசுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் பிறந்த மாவட்டத்திற்குப் பெரியார் மாவட்டம் என்று பெயர் சூட்டியதைப்போல, அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த மாவட்டமான செங்கல்பட்டு மாவட்டத்திற்கு, ஏன் அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்டக் கூடாது? நாம் எல்லாம் அண்ணா நாமம் வாழ்க என்று சொல்கிறோம். ஆகவே அவருடைய நாமம் வாழ்கின்ற வகையில், இனிமேலாவது செங்கை மாவட்டத்திற்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்ட அரசு எண்ணுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பிறந்த மாவட்டம் என்று பெரியார் மாவட்டத்திற்கு பெயர் வைக்கிற போது, புதிதாக ஒரு மாவட்டம் உருவாகியது. அதனால் அதற்குப் பெரியார் மாவட்டம் என்று பெயர் சூட்டப்பெற்றது. செங்கல்பட்டு மாவட்டம் ஏற்கனவே இருக்கிற ஒரு மாவட்டம். ஏற்கனவே இருக்கிற ஒரு மாவட்டத்திற்குப் பெயரை மாற்றினால் அதனால் சங்கடங்கள் ஏற்படுமோ என்று அதைப்பற்றி யோசனை வரவில்லை.